**தமிழ்நாடு தகவல் ஆணையம்**

எண்.19, அரசு பண்ணை இல்லம். பேர்ன்பேட்டை, நந்தனம், சென்னை - 600 035

தொலைபேசி எண். 044 - 2951 5590

**<u>ஆணை நாள் – 15.04.2025</u>**

**<u>முன்னிலை</u>**

# திரு முகம்மது ஷகீல் அஃதர், இகாப (ஓய்வு)
# மாநில தலைமை தகவல் ஆணையர்

*****

## <u>வழக்கு எண். SA 13203/SCIC/2023</u>

திரு.நல்லதம்பி த/பெ.படிவுத் தேவர் — மேல்முறையீட்டாளர்
எண்.8/23, கிழக்கு தெரு
கீழப்பெருமாள்பட்டி
சக்கரப்பநாயக்கனூர் அஞ்சல்
உசிலம்பட்டி தாலுக்கா
மதுரை - 625 207.

/எதிர்/

பொதுத் தகவல் அலுவலர்/
சார் பதிவாளர்
சார் பதிவாளர் அலுவலகம் .... பொது அதிகார அமைப்பு
சோழவந்தான், மதுரை மாவட்டம்.

**<u>ஆணை</u>**

மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 பிரிவு 6(1)-ன்கீழ் 13/05/2023 தேதியிட்டு பொதுத் தகவல் அலுவலர்/ சார்பதிவாளர் அலுவலகம், சோழவந்தான், மதுரை மாவட்டம் அவர்களுக்கு அனுப்பிய மனுவில், கீழ்க்கண்டவாறு கோரியுள்ளார், "சோழவந்தான் சார்பதிவாளர் அலுவலகத்தில் 24/07/2017 அன்று பதிவு செய்த ஆவணம் எண்.1465/2017-ல் பதிவு செய்த போது சமர்ப்பித்த அதன் தொடர்புடைய அனைத்து மூல ஆவணங்களையும் சான்றிட்ட நகல்களாக தர வேண்டுகிறேன்" என்பன போன்று 10 (பத்து) இனங்களில் தகவல்களை வழங்கக் கோரியுள்ளார். பொதுத் தகவல் அலுவலர்/ சார் பதிவாளர், சோழவந்தான் அவர்கள் மனுதாரருக்கு த.உ.ச.எண்.7/2023, நாள் 10/06/2023 வாயிலாக பதில் அனுப்பியுள்ளார்.

2. பின்னர், மனுதாரர் / மேல்முறையீட்டாளர் பிரிவு 19(1)-ன் கீழ் 16/06/2023 தேதியிட்டு தனது முதல் மேல்முறையீட்டு மனுவை, மாவட்டப் பதிவாளர், மதுரை

தெற்கு மாவட்டம்-க்கு அனுப்பியுள்ளார். அதற்கு மேல்முறையீட்டு அலுவலர்/ மாவட்டப் பதிவாளர் அவர்கள் மனுதாரருக்கு எண்.5821/ஆ1/2023, நாள் 28/06/2023 வாயிலாக பதில் அனுப்பியுள்ளார்.

3. அதன் பின்னர், மனுதாரர் / மேல்முறையீட்டாளர் 13/07/2023 தேதியிட்டு பிரிவு 19(3)-ன் கீழ் இரண்டாம் மேல்முறையீட்டு மனுவை ஆணையத்திற்கு அனுப்பியுள்ளார். அதனைப் பெற்ற ஆணையம் SA 13203/SCIC/2023 ஆக பதிவு செய்து, மேற்சொன்ன இரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் மீது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு, மனுதாரர் கோரியுள்ள தகவல்களை வழங்க, பொதுத் தகவல் அலுவலருக்கு 13/05/2023 தேதியிட்ட ஆணையத்தின் கடிதத்தில் அறிவுறுத்தப்பட்டிருந்தது. பொதுத் தகவல் அலுவலர்/ சார் பதிவாளர், சோழவந்தான் சார்பதிவகம், மதுரை தெற்கு அவர்கள் ந.க.எண்.165-7/2024, நாள் 11/11/2024 வாயிலாக தகவல் அனுப்பியுள்ளார். பின்னர், மனுதாரர் 20/12/2024 தேதியிட்டு ஆணையத்திற்கு ஆட்சேபணை மனுவினை அனுப்பியுள்ளார்.

4. இந்நிலையில், இந்த இரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் மீது நேரடி விசாரணை மேற்கொள்ளும் பொருட்டு 15/04/2025 அன்று நடைபெறும் தமிழ்நாடு தகவல் ஆணைய விசாரணைக்கு ஆஜராகுமாறு மனுதாரருக்கும், பொதுத் தகவல் அலுவலருக்கும் ஆணையத்தால் விசாரணை அறிவிப்பு அழைப்பாணைகள் அனுப்பப்பட்டது.

**5. இன்றைய விசாரணைக்கு, மனுதாரர் ஆஜராகவில்லை. எனினும், 14/04/2025 அன்று காலை 11.09 மணிக்கு மின்னஞ்சல் அனுப்பி வழக்கினை பிறிதொரு தேதிக்கு ஒத்திவைக்கக் கோரியுள்ளார். ஆணையத்தின் அழைப்பாணை அனுப்பப்பட்டு, பொதுத் தகவல் அலுவலருக்கு தகவல் தெரிவித்து விட்ட நிலையில், மனுதாரரின் இறுதி நேர கோரிக்கையினை ஆணையத்தால் ஏற்கவியலவில்லை. பொது அதிகார அமைப்பின் சார்பில், திரு.சு.சுப்பையன், சார் பதிவாளர் (பொறுப்பு), சோழவந்தான் சார்பதிவகம், அவர்கள் ஆஜராகி ஏற்கெனவே மனுதாரருக்கு 10/06/2023 தேதியிட்ட கடிதம் வாயிலாக இணையதள முகவரியை அனுப்பி, மனுதாரரை இணையதளம் வாயிலாக கட்டணம் செலுத்தி, தேவையான ஆவணங்களின் நகல்களை பதிவிறக்கம் செய்து கொள்ள தெரிவித்துள்ளதாகக் கூறினார். மேலும், அவர் தெரிவிக்கையில், 18/06/2023 மற்றும் 11/11/2024 தேதிகளிட்ட கடிதங்கள் வாயிலாகவும் பதில் அனுப்பப்பட்டுள்ளதாகவும் கூறினார். மனுதாரர் 20/12/2024 தேதியிட்டு, தனது ஆட்சேபணை மனுவை அனுப்பியுள்ளார்.**

**6. மேலும், பொதுத் தகவல் அலுவலர், மனுதாரரை கட்டணம் செலுத்தி, ஆவணங்களின் நகல்களைப் பெற்றுக்கொள்ள தெரிவித்திருந்த போதிலும், தற்போது, தங்களது அலுவலகத்தின் பராமரிப்பில் இருந்த சில ஆவணங்களின் நகல்களைக் கொண்டு வந்திருப்பதாகத் தெரிவித்து, அதனை ஆணையத்தின் முன்பு சமர்ப்பித்தார்.**

**7. எனவே, பொதுத் தகவல் அலுவலர்/சார்பதிவாளர், சோழவந்தான் சார்பதிவகம், அவர்கள் தற்போது கொண்டு வந்துள்ள ஆவணங்களின் நகல்களை, அலுவலக முகப்பு கடிதத்துடன் இணைத்து, மனுதாரருக்கு இவ்வாணை கிடைக்கப் பெற்ற மூன்று தினங்களுக்குள் அஞ்சல் ஒப்புகை அட்டையுடன் கூடிய பதிவஞ்சலில்**

**அனுப்பி வைப்பதோடு, அதன் பின்னர், மனுதாரரிடமிருந்து பெறக் கூடிய அஞ்சல் ஒப்புகை அட்டையின் நகல், அலுவலக முகப்பு கடிதத்தின் நகல் ஆகியவற்றை SCIC பிரிவு, தமிழ்நாடு தகவல் ஆணையத்திற்கு இவ்வாணை கிடைக்கப் பெற்ற 15 தினங்களுக்குள் அனுப்பி வைக்க வேண்டுமென்று ஆணையம் உத்தரவு பிறப்பிக்கின்றது. இத்துடன் இவ்விரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் மீதான வழக்கின் விசாரணை முற்றாக்கம் செய்யப்படுகிறது.**

**ஒம்./-(முகம்மது ஷகீல் அ்தர்)**
**மாநில தலைமை தகவல் ஆணையர்**

**//ஆணைப்படி//**

**உதவி பதிவாளர்**

## வழக்கு எண். SA 13203/SCIC/2023

**பெறுநர்**

**பொது அதிகார அமைப்பு**

பொதுத் தகவல் அலுவலர்/
சார் பதிவாளர்
சார் பதிவாளர் அலுவலகம்
சோழவந்தான், மதுரை மாவட்டம்.

**மேல்முறையீட்டாளர்**

திரு.நல்லதம்பி த/பெ.படிவுத் தேவர்
எண்.8/23, கிழக்கு தெரு
கீழப்பெருமாள்பட்டி
சக்கரப்பநாயக்கனூர் அஞ்சல்
உசிலம்பட்டி தாலுக்கா, மதுரை - 625 207

RG/PC